Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT,
BODINAYAKANUR

10.08.2023

**STC No. 333/2023**

Depositions of -பாண்டியன் ..witness for ...Petitioner Side Witness -1

| | | |
|---|---|---|
| Name | - | பாண்டியன் (PW- 1 ) |
| Father's and Husband's name | - | சுப்புராம் |
| Village | - | |
| Taluk | - | |
| Caste | - | |
| Calling | - | |
| Religion | - | |
| Age | - | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24.01.2024.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**( எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு, தேனி அங்கன்வாடியில் பணிபுரியும் ஜெயபாண்டி என்பவர் பழக்கம் என்றால் தேனி ரத்தினம் நகரில் உள்ள ஜெயம் நகரில் அங்கன்வாடியில் டீச்சராக உள்ளார், அவரிடம் நான் ரூ.3 லட்சம் ரூபாய்க்கு பதிவு செய்யப்பட்ட பத்திரம் மூலமாக ஒரு சொத்தை ஈடு வாங்கியுள்ளேன். மேற்படி அவர் மீது தேனி சார்பு நீதிமன்றத்தில் பணத்தை திருப்பி தரக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு எண் அ.வ.எண் .270/2023 என்றால் சரிதான். மேற்படி ஜெயபாண்டியும், எதிரியும் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் என்றால் எதிரி ஜெயபாண்டியின் உடன் பிறந்த தம்பி. எதிரியை ஜெயபாண்டி தான் அறிமுகம் செய்து

வைத்தார் என்றால் இருவரும் வந்துதான் இடத்தை பதிந்து கொடுத்து 3 லட்சம் ரூபாய் பணம் கேட்டார்கள். மேற்படி பத்திரத்தில் சாட்சி கையெழுத்து எதிரிதான் செய்துள்ளார். வீடு கட்ட பதிந்த தேதி என்ன தேதி என்றால் தேதி ஞாபகமில்லை. 29.09.2022ம் தேதி என்றால் ஞாபகமில்லை. மேற்படி ஜெயபாண்டியிடம் பணத்தை கொடுக்கும் போது பிணை ஆவணமாக நிரப்பப்படாத ஒரு காசோலையை வாங்கினேன் என்றால் சரியல்ல. மேற்படி காசோலையும் 29.09.2022ம் தேதி தான் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி எதிரி கொடுத்த காசோலையை நான் தேதியும், தொகையையும் நானாகவே நிரப்பி கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரி மீது தேனி சார்பு நீதிமன்றத்தில் மேற்படி இவ்வழக்கு காசோலையை வைத்து சிவில் வழக்கு அ.வ.எண் 320/2023 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் காசோலைதான் எதிரி கொடுத்த காசோலை என்றால் சரிதான். மேற்படி காசோலையில் எழுத்தால் எழுதப்பட்ட பெயர் மற்றும் தொகையை யார் எழுதினார்கள் என்றால் எதிரிதான் நிரப்பி எடுத்து வந்தார். மேற்படி வாசகங்கள் என் முன்னிலையில் நிரப்பப்படவில்லை என்றால் சரிதான். எதிரிதான் நிரப்பி எடுத்து வந்தார். எதிரி கையெழுத்து போட்ட மையும், எழுத்தால் எழுதப்பட்ட வாசகத்தில் உள்ள மையும் வேறு வேறாக உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, எதிரிதான் நிரப்பி எடுத்து வந்தார். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி கையெழுத்து போட்டு வாங்கவில்லை என்றாலும், ஒப்புதல் அட்டையில் உள்ள எதிரியுனுடையது அல்ல என்றால் கையெழுத்து உள்ளது, அது யாருடைய கையெழுத்து என்று எனக்கு தெரியாது. நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிறேனா என்றால் செய்கிறேன். 2022- 2023க்கான ஆண்டு வருமான வரி தாக்கல் செய்தேனா என்றால் செய்துள்ளேன். அதில் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்பட்ட ரூ.4 லட்சத்தை கணக்கு காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். அதை தேவைப்படும் போது நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்வேனா என்றால் தாக்கல் செய்வேன். எதிரியின் அக்கா என்னிடம் வாங்கிய கடனுக்காகத்தான் பொறுப்பிற்காக இவ்வழக்கு காசோலை கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி நேரடியாகவோ, அக்கவுண்ட்

மூலமாகவோ என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றால் சரியல்ல, நேரடியாக கொடுத்தது உண்மைதான், வங்கியின் மூலமாக எந்த பணமும் கொடுக்கவில்லை. எதிரியிடம் பணம் பறிக்கும் நோக்கத்திற்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court,
and read over to the witness and
admitted by the deponent to be correct.

G K VELUMAYIL

Digitally signed by G K VELUMAYIL
Date: 2024.01.24 16:47:53 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.